செய்தி வெளியீடு எண்: 275 நாள்: 17.04.2020

## செய்தி வெளியீடு

**FCI– உணவு பாதுகாப்பின் மூலம் நாட்டின் வாழ்வாதாரத்தை உறுதி படுத்தல்**

தமிழ்நாட்டில் இந்திய உணவு கழகம் (FCI) தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழ் அதன் வழக்கமான தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், பிரதம மந்திரியின் கரிப் கல்யாண் அன்ன யோஜனா (PMGKAY) திட்டத்தின்கீழ் மாநிலத்திற்கு அனுமதிக்கப்பட்ட கூடுதல் ஒதுக்கீட்டையும் பூர்த்தி செய்வதன் மூலம் தமிழகத்தில் தங்கு தடையின்றி உணவு தானியங்களை வழங்குவதை உறுதி செய்வதில் முக்கியமான பங்கைக் கொண்டுள்ளது. இதன் மூலம் மாநிலத்தில் சுமார் 3.60 கோடி பயனாளிகள் ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை ஒவ்வொரு மாதமும் ஐந்து கிலோ அரிசி கூடுதலாக இலவசமாக பெறமுடியும்.

இதற்காக, தமிழ்நாடு முழுவதும் அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் உள்ள 68 இந்திய உணவு கழகம் கிடங்குகளிலிருந்து தங்கு தடையின்றி உணவுத் தானியங்களை மாநில அரசின் நியாய விலை கடைகள் மூலமாக விநியோகிக்க வழிவகுத்துள்ளது. இதற்காகமாநிலம் முழுவதும் சுமார் எட்டாயிரம் கள ஊழியர்களை, பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

இந்திய உணவு கழகத்தின் தெற்கு மண்டலதின் செயல் இயக்குனர் திரு. சு. னு. நஸிம் IAS அவர்களது அறிக்கையில் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்ட நாளிலிருந்து தற்போதுவரை இந்திய உணவு கழகம் சுமார் 52 லட்சம் உணவு தானிய மூடைகளை (50 கிலோ விகிதம்) 101 ரயில்கள் மூலம் தமிழகம் முழுவதும் கொண்டு சேர்க்கபட்டுள்ளது. அதில் அரிசி 96 ரயில் மூலம் தெலுங்கானா, ஆந்திர, ஒரிசா, பஞ்சாபில் இருந்தும், கோதுமை 5 ரயில் மத்தியபிரதேசத் திலிருந்தும் கொண்டு வரப்பட்டுள்ளது. சுமார் 53 லட்சம் அரிசி மூடைகளையும் சுமார் 2.50 லட்சம் கோதுமை மூடைகளையும் (50 கிலோ விகிதம்) தமிழகத்திற்கு பொது விநியோகத்திற்காக வழங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். தமிழகம் முழுவதும் இந்திய உணவு கழக கிடங்குகளில் 13.4லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் தேவைக்கு ஏற்ப வழங்க கையிருப்பு உள்ளதாகவும், மாநிலஅரசு பொது விநியோகத்திற்காக தானியங்களை எடுத்தவுடன் மேற்கொண்டு கொண்டுவரவும் ஏற்கனவே வழி வகுக்கப் பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

மேலும் அவர் இந்திய உணவுக் கழகத்தின் அனைத்து ஊழியர்களும் தொழிலாளர்களும் உடல்நலம் மற்றும் சுகாதாரம் குறித்து பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை கடைப்பிடிப்பதுடன், பணியிடத்தில் சமூக தொலைதூர விதிமுறைகளையும் பின்பற்றுகிறார்கள் என்றும் கூறியுள்ளார்.

மேலும் திரு. சு. னு. நஸிம் அவர்கள் இந்திய அரசு தற்போது ஒரு புதிய பயனாளி திட்டதை அறிமுகப்படுத்தியுள்ளதாக கூறியுள்ளார். அதன்படி புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு ஏழை மக்களுக்கு சமைத்த உணவை வழங்கி நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு கோதுமை ஒரு கிலோ ரூ.21 மற்றும் ஒரு கிலோ அரிசி ரூ.22கும் வழங்கப் படும் என அறிவித்துள்ளார். அனைத்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் முன் வந்து இந்தத் திட்டத்தை முழுமையாகப் பயன்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். தற்போதைய இந்த கடினமான காலங்களில் யாரும் பசியுடன் இருக்க கூடாது என்பதை உறுதி செய்ய முயற்சிக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு இது உறுதுணையாக இருக்கும் என கூறியுள்ளார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9